மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல 'எலெக்ட்ரானிக்', 'ஏரோனாட்டிக்ஸ்' போன்ற பிரிவுகளில் தேவை அதிகம் இருப்பதால் அந்தப் பிரிவுகளைக் கடந்த 2, 3 ஆண்டுகளில் ஓரளவு விரிவுபடுத்தியிருக்கிறோம். சென்னை, கிண்டி இஞ்சினீயரிங் கல்லூரியில் இந்தப் பிரிவுகளிலுள்ள இடங்களைப் படிப்படியாக உயர்த்தியிருக்கிறோம். மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் ஏரோனாட்டிக்ஸுக்குப் போதுமான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே ஐ.ஐ.டி. யிலும் ஏரோனாட்டிக்ஸுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

Madhavaram Leprosy Home

*29 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that an isolation ward in the Madhavaram Leprosy Home has been donated by a private organisation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மாதவரம் தொழுநோய் இல்லத்திற்கு 22—12—1974 அன்று வட சென்னை அரிமா சங்கத்தால் (Lions Club) நோயாளிகளைத் தனியே பிரித்து வைக்கும் தனி வார்டு ஒன்று நன்கொடையாக கட்டி அளிக்கப்பட்டது. அரசு மானியம் ஏதும் இல்லாமல், அது தனியார் தொண்டு நிறுவனமாக நடத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக நன்கொடைகள் வசூலித்து இம்மாதிரி முக்கியமான வியாதியஸ்தர்களுக்குத் தனி வார்டுகள் ஏற்படுத்தச் சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா? அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, முக்கியமாகத் தடுக்கப்பட வேண்டிய நோய்களில் இந்தக் காசநோய் ஒன்று. அதற்காகக் காசநோய் வில்லைகள் ஆண்டுதோறும் காந்தியடிகள் பிறந்த நாளிலிருந்து கிட்டத்தட்ட 90 நாட்களுக்கு

1975 அக்டோபர் 24]

விற்கப்படுகின்றன. கடந்த 6, 7 ஆண்டுகளில் தமிழ் நாட்டில்தான் காசநோய் வில்லைகள் அதிகம் விற்பனை செய்யப்பட்டு, அகில இந்தியாவிலேயே முதலிடத்தை தொடர்ந்து வகித்து வருகின்றது. காசநோய் வில்லைகள் விற்பனை மாவட்ட வாரியாகப் பார்க்கப்போனால் ஒரு மாவட்டத்தில் 50,000 ரூபாய், இன்னொன்றில் 1½ லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு இருக்கிறது. அதன்மூலம் கிடைக்கின்ற பணத்தில் 10 சதவிகிதம் தவிர, மீதி அந்தந்த மாவட்டங்களிலேயே காசநோய் தடுப்புப் பணிக்காகச் செலவிடப்படுகிறது.

காசநோய் அளவுக்குத் தொழுநோயும் முக்கியமாகத் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தபோதிலும் அந்த அளவுக்கு இடம் பெறவில்லை. ஆனால் தொழுநோயாளிகளைப் பராமரிக்கத் தனியார் இல்லங்கள் பரவலாக இருக்கின்றன. கிறிஸ்தவ பாதிரிமார்கள் அந்தத் தொண்டில் சிறந்து விளங்குகிறார்கள். கிறிஸ்தவ பாதிரிமார்கள் என்று சொல்லும்போது அவர்கள் பிரச்சாரத்திற்காக இத்தகைய இல்லங்களை நடத்துகிறார்கள் என்று சொல்லவில்லை; சில இடங்களில் 2, 3 சகோதரிகளை வைத்து இத்தகைய தொண்டு இல்லங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமும் அத்தகைய இல்லங்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச்சார உதவித் தொகை வழங்கி, ஆதரவு காட்டி வருகிறது. அதேநேரத்தில் பிச்சை எடுக்கும் தொழு நோயாளிகளைப் பராமரிக்க அரசாங்கம் பத்து மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அவைகளில் ஏறத்தாழ 4,000 பேர் தங்கியிருக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனியாக நன்கொடை வசூலித்து இத்தகைய நிறுவனங்களை நடத்தும் முயற்சிகளை இந்த அரசு அண்மைக் காலத்திலே ஏற்றுக்கொள்வதில்லை.

Treatment service for T.B. patients

* 30 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to give domiciliary service to T.B. patients in all the districts in the State; and

(*b*) if so, the details thereof ?